# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1851/7 - 2014 පෙබරවාරි මස 24 වැනි සඳුදා - 2014.02.24

*1851/7 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் சரத்து 154 ஏ (1) இன் தேவைப்படுத்தலுக்கமைவாக 2014.02.13 ஆந் திகதி கிழக்கு மாகாணத்தின் ஆளுநரின் இசைவு பெறப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கிழக்கு மாகாண மாகாண சபை வீடமைப்பு அதிகாரசபை நியதிச்சட்டம் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு கிழக்கு மாகாண மாகாண சபைச் செயலாளர் முகம்மது காசிம் முகம்மது செரிப் (f) ஆகிய நான், ஆளுநரின் இசைவு பெறப்பட்ட அத்தினத்திலிருந்து அமுலுக்கு வரும்படியாக இத்தால் பகிரங்கப்படுத்தி கட்டளையிடுகின்றேன்.

எம். சி. எம். செரிப் (f),<br>
மாகாண சபைச் செயலாளர்,<br>
கிழக்கு மாகாண மாகாண சபை.

மாகாண சபைச் செயலகம்,<br>
கிழக்கு மாகாண மாகாண சபை,<br>
திருகோணமலை,<br>
2014, பெப்புருவரி 20.

**2013 ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை நியதிச் சட்டம்**

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை ஒன்றைத் தாபித்தல் மாகாண வீடமைப்புத்திட்டமிடல் மற்றும் திட்டங்களை அமுலாக்கல் கண்காணித்தல் ஆளணிகளை நியமித்தல் மற்றும் அவற்றோடிணைந்த அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான ஒரு நியதிச்சட்டம். இந்நியதிச்சட்டம் தேசிய வீடமைப்புச் சட்டம் (அத்தியாயம் 401) இற்கு ஒத்திசைவற்றதாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கிழக்கு மாகாணசபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் அமுலுக்கு வரும் திகதியும்

1. இந்நியதிச்சட்டம் '2013 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கிழக்கு மாகாண சபை வீடமைப்பு அதிகாரசபை நியதிச்சட்டம்' என அழைக்கப்படலாம் என்பதுடன் கிழக்கு மாகாண ஆளுநரின் இசைவு பெறப்படும் அத்தகைய தினத்தில் அமுலுக்கு வருததாதலும் வேண்டும்

*பகுதி I*

**கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையைத் தாபித்தல்**

*மாகாண வீடமைப்பு அதிகார சபையைத் தாபித்தல்.*

2. (1) இதனகத்துப்பின்னர் 'வீடமைப்பு அதிகாரசபை' என குறித்துக்காட்டப்படுவதும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையென அழைக்கப்படுவதுமான மாகாண வீடமைப்பு அதிகார சபையொன்று இத்தால் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் பெயரிடப்பட்டுள்ள வீடமைப்பு அதிகாரசபையானது ஓர் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் என்பதுடன் அது இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்டமைதல் வேண்டும் என்பதுடன் அதன் பெயரில் வழக்கிடவோ அல்லது வழக்கிடப்படவோ முடியுமாகலாம்.

(3) மாகாண அமைச்சர் பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய சந்தர்ப்பத்தில் வீடமைப்பு அதிகாரசபை பிரதம செயலாளரின் ஆலோசனையுடனும் அமைச்சர்கள் வாரியத்தின் சிபாரிசிற்கமையவும் ஆளுநரின் அனுமதியின் பேரிலும் கிளைக் காரியாலயங்களைத் தாபித்து பராமரிக்கலாம்.

*வீடமைப்பு அதிகார சபையின் அங்கத்தவர்கள்.*

3. (1) வீடமைப்பு அதிகாரசபை கீழ்க்காட்டப்படும் அங்கத்தவர்களைக்கொண்டதாய் அமைதல் வேண்டும்

(அ) இதனகத்துப்பின்னர் 'நியமன அங்கத்தவர்கள்' என குறித்துக்காட்டப்படும் ஐந்து அங்கத்தவர்களை வீடமைப்புக்குப் பொறுப்பான மாகாண அமைச்சர் கட்டுமானப்பொறியியல், வாணிகவியல், நிதியியல் மற்றும் நிர்வாகவியல் விடயங்களில் பரந்த அனுபவம் மற்றும் நிரூபணமாகக்கூடிய இயலுமையைக் கொண்டவர்கள் என மாகாண அமைச்சரால் கருதக்கூடிய அத்தகைய நபர்களிலிருந்து நியமிப்பார்: அத்துடன்

(ஆ) நான்கு 'பதவிவழி அங்கத்தவர்கள்'

(i) வீடமைப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பான மாகாண அமைச்சின் செயலாளர் ;

(ii) கிழக்கு மாகாண நிதிக்குப் பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளர் ;

(iii) கிழக்கு மாகாணசபையின் வீடமைப்புத் திணைக்களப் பணிப்பாளர் என்ற பதவி உருவாக்கப்பட்டு இந்நியதிச் சட்டம் அமுலுக்கிடப்படும் அத்தகைய தினத்தில் அந் நியமனம் செய்யப்பட்டிருக்காத நிலையில் அத்தகைய நியமனம் செய்யப்படும் அத்தகைய தினம் வரை கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்;

(iv) கிழக்குமாகாண திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிப்பிரதம செயலாளர் .

(2) வீடமைப்பு என்ற விடயத்துக்குப்பொறுப்பான மாகாண அமைச்சர் நியமன அங்கத்தவர்களில் இருந்து ஒருவரை வீடமைப்பு அதிகாரசபைக்கு தலைவராக நியமிப்பார்

(3) ஒரு நபர் அவர் பாராளுமன்ற அங்கத்தவராக இருத்தல் அல்லது பாராளுமன்ற அங்கத்தவராக ஆக்கப்படுதல் அல்லது மாகாண சபை அங்கத்தவர் அல்லது ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனத்துக்கான அங்கத்தவர் அல்லது இலங்கைப் பிரசையல்லாத ஒருவர் வீடமைப்பு அதிகாரசபையின் அங்கத்தவராக நியமிக்கப்படவோ அல்லது அங்கத்தவராக தொடரவோ தகைமையற்றவராதல் வேண்டும்

(4) மாகாண அமைச்சர் ஒரு நபரை வீடமைப்பு அதிகாரசபைக்கு அங்கத்தவராக நியமனம் செய்யுமுன்னர், அத்தகைய நபர் வீடமைப்பு அதிகாரசபையின் அங்கத்தவர் என்ற வகையில் தனது செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் அவரது நிதிசார்ந்த அல்லது ஏனைய அக்கறைகள் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதான தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதில் திருப்தியடைந்து கொள்ளுதல் வேண்டும். வீடமைப்பு அதிகாரசபையின் ஓர் அங்கத்தவருக்கு ஏதேனும் அத்தகைய அக்கறை இருக்கவில்லை என்பதை மாகாண அமைச்சர் காலத்துக்குக் காலம் திருப்தியடைந்துகொள்ளுதல் வேண்டும். மாகாண அமைச்சரால் வீடமைப்பு அதிகார சபைக்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்க உத்தேசிக்கும் எவரேனும் நபர் அமைச்சரால் எப்போது கோரிக்கை

விடுக்கப்படுகின்றதோ அப்போது அதற்கமைவாகவும், இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்கமைவாகவும் அந்நபரால் தனது கடமைகளை செயற்படுத்துவது தொடர்பில் அமைச்சர் அவசியமானதெனக் கருதும் அத்தகைய தகவல்களை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு (7) மற்றும் (8) ஆகியவைகளின் ஏற்பாடுகளுக்கமைவாக வீடமைப்பு அதிகாரசபையின் ஒவ்வொரு நியமன அங்கத்தவர்களின் பதவிக்காலம் அமைச்சர் நியமனம் செய்யும் சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படுவதற்கமைவாக அவரது நியமனத் திகதியிலிருந்து கணக்கிடப்படும் மூன்று வருடங்களுக்கு விஞ்சலாகாது என்பதுடன் உட்பிரிவு (7) இன்கீழ் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்காவிடின் அவர் மீள் நியமனத்திற்கு அருகதையுடையவராதல் வேண்டும். எவ்வாறாயினும் அமைச்சரினால் வீடமைப்பு அதிகாரசபையின் நியமன அங்கத்தவரொருவரின் வெற்றிடமொன்றினை நிரப்புவதற்காக நியமிக்கப்பட்ட அத்தகைய அங்கத்தவர், அவர் பதவியிலிருந்து முன்னமே நீக்கப்படாதவிடத்து அவர் எவ்வங்கத்தவருக்காக நியமிக்கப்பட்டாரோ அவ்வங்கத்தவரின் மீதமான காலத்திற்கு பதவியிலிருப்பார்.

(6) உட்பிரிவு (8) இன் ஏற்பாடுகளுக்கமைவாக வீடமைப்பு அதிகாரசபைத் தலைவரின் பதவிக்காலம் அவரது அங்கத்துவத்திற்கான காலத்திற்கமைந்ததாக அமையும்.

(7) மாகாண அமைச்சர் எவரேனுமொரு நியமன அங்கத்தவரை அதற்கான காரணங்களை காட்டி பதவியிலிருந்து நீக்கக் கட்டளையொன்றை விடுக்கலாம்.

(8) உட்பிரிவு (7) இன்கீழ் அமைச்சரால் எந்த நியமன அங்கத்தவர் தொடர்பில் கட்டளையொன்று விடுக்கப்பட்டதோ அந்த அங்கத்தவர் பதவியிலிருந்து விலகியவராதல் வேண்டும்.

(9) வீடமைப்பு அதிகாரசபையின் ஒரு நியமன அங்கத்தவர் எச்சந்தர்ப்பத்திலும் தனது அங்கத்தவர் பதவியிலிருந்து அதுதொடர்பில் ஒரு கடிதத்தினை அமைச்சருக்கு முகவரியிடுவதன் மூலம் விலக்கிக்கொள்ளலாம்

(10) வீடமைப்பு அதிகாரசபையின் எவரேனும் ஓர் அங்கத்தவர் தனது குறைபாடான தேகாரோக்கியம், வேறு வைத்திய காரணங்கள் நாட்டைவிட்டுச் செல்லுதல் அல்லது வேறேதேனும் காரணங்களால் தற்காலிகமாக தனது கடமைகளை செயற்படுத்த முடியாது போகும் சந்தர்ப்பத்தில்:

(அ) அத்தகைய அங்கத்தவர் ஒரு நியமன அங்கத்தவராயின் உட்பிரிவு 3(1)(அ) வின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு மாகாண அமைச்சர் இன்னொரு நபரை அவ்வங்கத்தவரின் இடத்திற்கு செயற்பட நியமிக்கலாம் ;

(ஆ) அத்தகைய அங்கத்தவர் உட்பிரிவு 3(1) (ஆ) வின் கீழ் நியமிக்கப்பட்ட பதவிவழி அங்கத்தவரின் இடத்திற்காக நியமிக்கப்படும் அலுவலர்.

(11) வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் தனது குறைபாடான தேகாரோக்கியம், வேறு வைத்திய காரணங்கள், நாட்டைவிட்டுச் செல்லுதல் அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் தற்காலிகமாக தனது கடமைகளை செயற்படுத்தமுடியாது போகும் சந்தர்ப்பத்தில் மாகாண அமைச்சர் வேறொரு நியமன அங்கத்தவரை அவரின் இடத்திற்கு தலைவராக செயற்பட நியமிப்பார்

(12) வீடமைப்பு அதிகாரசபையின் அனைத்து அல்லது எவரேனும் அங்கத்தவர்களுக்கு அத்தகைய கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவீனங்கள் வீடமைப்பு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செய்யப்படுதல் வேண்டும்.எவ்வாறாயினும் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவீனங்கள் பிரதம செயலாளருடனான ஆலோசனையின் பிரகாரமும் அமைச்சர்கள் வாரியத்தின் சிபாரிசின் பிரகாரமும் ஆளுநரின் அங்கீகாரத்திற்கமையவும் வழங்கப்படுதல் வேண்டும்.

வீடமைப்பு அதிகார சபையின் கூட்ட நடபடிகள் .

4. (1) வீடமைப்பு அதிகாரசபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைவர் தலைமை தாங்குவார். ஏதேனும் கூட்டமொன்றிற்கு தலைவர் பிரசன்னமாகியிருக்கவில்லையாயின் அக்கூட்டத்திற்கு பிரசன்னமாகி இருக்கும் அங்கத்தவர்கள் தமக்குள் ஒருவரை தெரிவுசெய்து அவர் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

(2) வீடமைப்பு அதிகாரசபை அவசியமெனக் கருதும் அத்தகைய சந்தர்ப்பங்களில் கூடும்.

(3) வீடமைப்பு அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் நபர் தனக்குரித்தான வாக்கிற்கு மேலதிகமாக தனது தீர்மான வாக்கையும் பயன்படுத்துவார்.

(4) வீடமைப்பு அதிகாரசபையின் கூட்டமொன்றிற்கான நிறைவெண் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஆவர்.

(5) வீடமைப்பு அதிகாரசபை அதனுடைய அங்கத்தவர்களிடையே ஏதேனும் வெற்றிடங்கள் இருப்பினும் செயற்படலாம் என்பதுடன் அதன் ஏதேனும் செயற்பாடு அல்லது கூட்டநடபடி அதன் அங்கத்தவர்களிடையே வெற்றிடம் நிலவுகின்றது அல்லது அங்கத்தவர் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுள்ளது என்ற காரணத்திற்காக மாத்திரம் வலிதற்றதாகக் கருதப்படமுடியாது.

(6) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாக வீடமைப்பு அதிகாரசபை அதன் கூட்டங்கள் மற்றும் அக்கூட்டத்தின் செயற்பாடுகள் விடயத்தில் விதிகளை ஆக்கலாம்.

வீடமைப்பு அதிகாரசபையின் பொது இலச்சினை.

5. (1) வீடமைப்பு அதிகாரசபையின் பொது இலச்சினை தலைவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

(2) வீடமைப்பு அதிகாரசபையின் பொது இலச்சினை அத்தகைய முறையில் வீடமைப்பு அதிகாரசபையால் தீர்மானிக்கின்ற விதத்தில் மாற்றியமைக்கப்படலாம்.

(3) வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட இரண்டு அங்கத்தவர்களின் பிரசன்னமில்லாமல் வீடமைப்பு அதிகாரசபையின் பொது இலச்சினை ஏதேனும் சாதனத்திலோ அல்லது ஆவணத்திலோ பதித்தலாகாது. அவ்விரண்டு அங்கத்தவர்களும் பிரசன்னமாகி இருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனம் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவர்

## பகுதி II

### வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள்

வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள.

6. (1) வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளாவான ;

(அ) தேசிய வீடமைப்புத் திட்டங்கள் தவிர்ந்த மாகாண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் உதவியளிக்கப்பட்ட சுய வீடமைப்புத் திட்டம் மற்றும் திட்டங்களை அமுலாக்குதல் ஒருங்கிணைத்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் ;

(ஆ) மாகாண வீடமைப்பு அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் அதனை வீடமைப்புக்குப் பொறுப்பான மாகாண அமைச்சருக்கு அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல் ;

(இ) எவரேனும் நபருடன் மாகாண அமைச்சரின் அங்கீகாரத்துடனான மாகாண வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்திற்கு அவசியமானது எனக் கருதப்படுவதும் நேரடியாக அல்லது கூட்டு முயற்சியாக செயற்படுத்தி நிறைவேற்றுகின்றதுமான அத்தகைய ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகளை 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 16 இன் பிரகாரம் ஏற்படுத்திக் கொள்ளுதல் ;

(ஈ) எவரேனும் நபர் வீடொன்றை பூரணப்படுத்திக்கொள்ள இயலாது உள்ள நிலையில் அத்தகைய வீட்டை பூரணப்படுத்திக் கொடுக்க அல்லது கடன் வழங்க அல்லது கட்டிட பொருட்களை வழங்க பொறுப்பேற்றல்.

(உ) வீடமைப்புக்குப் பொறுப்பான மாகாண அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட அத்தகைய மாகாண அபிவிருத்தி வீடமைப்பு திட்டத்தை அமுலாக்குதல் ;

(ஊ) ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை பெற்று உடமையில் வைத்துக் கொள்ளுதல் அல்லது அவ்வாறு பெற்று உடமையில் வைத்திருக்கும் அத்தகைய ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை அகற்றுதல்.

(எ) ஏதேனும் வீடமைப்பு பிரதேசத்திற்கு வீதிகள், நீர், மீன்சாரம், எரிவாயு, வடிகாலமைப்புக்கள் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ;

(ஏ) வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் சேவைகளுக்கு கட்டணங்களை அறவிடுதல் ;

(ஐ) வீடமைப்பு நிர்மாணங்களுக்கு அவசியப்படும் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது இறக்குமதி செய்தல் மற்றும் வழங்குதல் ;

(ஒ) பணமாகவோ அல்லது வேறு விதமாகவோ கிடைக்கப் பெறுகின்ற நன்கொடைகள் உதவு தொகைகள், பரிசில்கள் பணக் கொடைகள் அல்லது மானியங்களை ஏற்றுக்கொள்ளுதல் அத்துடன் வீடமைப்பு அதிகார சபை அதன் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு அவைகளுக்காக விண்ணப்பித்தல் ;

(ஓ) வெளிநாடுகளிலோ அல்லது உள்ளூரிலோ வீடமைப்பு அதிகார சபையின் ஆளணியினரை பயிற்சிகள், தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கு அரசாங்கத்தினால் அல்லது கிழக்கு மாகாண சபையினால் ஆக்கப்பட்ட விதிகள் அல்லது வேறேதேனும் அதிகாரங்களினால் ஏற்படுத்தப்பட்ட வழிகாட்டல்களுக்கமைய பிரேரித்தல் ;

(ஔ) இந் நியதிச்சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்தி பிரயோகித்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு அல்லது அதனோடிணைந்த அல்லது அதன் விளைவான அனைத்து செயல்கள் அல்லது செயல் வடிவங்களையும் புரிதல்

(2) உட் பிரிவு (1) இன் கீழ் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்தி பிரயோகிக்கின்றபோது வீடமைப்புத் திட்டம் அல்லது வீடமைப்பு அபிவிருத்தியை தயாரித்து அமுலாக்குவது ஏதேனும் அரச முகவர் அல்லது பொதுக் கூட்டுத்தபானத்தின் உரிமைகள் அக்கறைகள் அல்லது செயற்பாடுகளில் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமென வீடமைப்பு அதிகாரசபை கருதுமாயின் அவ்விடயம் தொடர்பில் அத்தகைய நிறுவனங்களுடன் வீடமைப்பு அதிகாரசபை கலந்தாலோசிப்பது அதன் கடமையாதல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின்கீழ் வீடுகளை அமைத்தல் அல்லது ஏதேனும் கட்டுமானங்களை நிர்மானித்தலின் போது வீடமைப்பு அதிகார சபை அது தொடர்பில் ஏதேனும் வலுவிலுள்ள சட்ட ஏற்பாடுகள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் ஏதேனும் உள்ளூராட்சி மன்றத்தினால் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அல்லது ஏதேனும் நிறுவனத்தினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள உபவிதியின் ஏற்பாடுகளை பின்பற்றுவது சட்ட முறையானதாதல் வேண்டும்.

7. (1) மாகாண அமைச்சர் காலத்திற்குக் காலம் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களை வீடமைப்பு அதிகாரசபை அதன் அதிகாரங்கள் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்குட்பட்டதாக செயற்படுத்தி பிரயோகித்து நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக வழங்குவார் என்பதுடன் வீடமைப்பு அதிகாரசபை அத்தகைய பணிப்புதலுக்கு செயல்வடிவம் கொடுத்தலும் வேண்டும்

மாகாண அமைச்சரின் பணிப்பு.

(2) மாகாண அமைச்சர் வீடமைப்பு அதிகாரசபையை எழுத்துமூலம் காலத்திற்குக்காலம் பணித்தலுக்கமைவாக வீடமைப்பு அதிகாரசபையின் சொத்துக்கள் நடவடிக்கைகள் தொடர்பிலான அத்தகைய அறிக்கைகள் கணக்குகள் மற்றும் தகவல்களை அதற்கான படிவத்தில் வழங்கும் என்பதுடன் வீடமைப்பு அதிகாரசபை அத்தகைய பணிப்புக்களை செயற்படுத்தலும் வேண்டும்

8. வீடமைப்பு அதிகாரசபை அதன் தலைவருக்கு அல்லது எவரேனும் அதிகாரிக்கு ஏதேனும் அதிகாரங்கள் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக எழுத்துமூலம் வழங்கும்.

வீடமைப்பு அதிகார சபையினால் அதிகாரக் கையளிப்பு என்பவைகள்.

## பகுதி III

### வீடமைப்பு அதிகார சபையின் ஆளணி

9. (1) அமைச்சரின் முன்னனுமதியின்பேரில் வீடமைப்பு அதிகாரசபை ஒரு பொது முகாமையாளரை வீடமைப்பு அதிகாரசபைக்கு நியமிக்கும்

வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர்.

(2) வீடமைப்பு அதிகாரசபையின் கொள்கை தொடர்பான பணிப்புகளுக்கமைவாக பொதுமுகாமையாளர் வீடமைப்பு அதிகார சபையின் ஒழுங்கமைப்பு மற்றும் அதிகாரங்கள் செயற்பாடுகள் மற்றும் கடமைகளை செயலுருப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பாவார்

(3) பொதுமுகாமையாளர் வீடமைப்பு அதிகாரசபையின் எழுத்துமூல அங்கீகாரத்தின் பேரில் வீடமைப்பு அதிகாரசபையின் எவரேனும் அதிகாரிக்கு அவரால் காலத்திற்கு காலம் தேவையானது எனத் தீர்மானிக்கப்படுகின்ற தனது அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிலிருந்து கையளிப்பாளர் என்பதுடன் அவ்வாறு அதிகாரங்கள் செயற்பாடுகள் மற்றும் கடமைகள் கையளிக்கப்பட்ட அத்தகைய அதிகாரி அவைகளை பொதுமுகாமையாளரின் பொது மற்றும் விசேட பணிப்புரைகளின் பேரில் செயற்படுத்துவார்.

(4) மாகாண அமைச்சரின் முன்னனுமதியின்றி பொதுமுகாமையாளர் பதவியிலிருந்து விலக்கப்படமுடியாது.

வீடமைப்பு அதிகார சபைக்கு ஆளணி நியமனங்கள் என்பன.

10. (1) செயலாளர், பிரதம செயலாளருடனான ஆலோசனையின் பிரகாரமும், ஆளுநரின் அனுமதிக்கமையவும் -

(அ) வீடமைப்பு அதிகார சபையின் செயற்பாடுகள் மற்றும் கடமைகளை செயல் திறனுடன் செயலுருப்படுத்தும் நோக்கத்துக்காக அவசியமான ஆளணியினரை உருவாக்கி நியமனம் செய்வார்.

(ஆ) அத்தகைய ஆளணியினருக்கான படிகள் சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைத் தீர்மானிப்பார்.

(இ) அத்தகைய ஆளணியினரின் சேவை கட்டுறுத்துக்களையும் நிபந்தனைகளையும் தீர்மானிப்பார், மற்றும்

(ஈ) அத்தகைய ஆளணியினருக்கான நலவுரித்துத்திட்டங்கள் அல்லது சேமலாபநிதிகள் என்பவைகளைத் தாபித்து அத்தகைய திட்டங்கள் அல்லது நிதியத்துக்கு பங்களிப்புச்செய்வார்.

(2) பகிரங்க சேவையிலிருக்கும் எவ்வதிகாரியையும் வீடமைப்பு அதிகாரசபையின் வேண்டுதலுக்கமைவாக தற்காலிகமாக விடுவிப்பு செய்யப்பட்டு வீடமைப்பு அதிகாரசபையின் ஆளணியாக வீடமைப்பு அதிகாரசபை தீர்மானிக்கின்ற அத்தகைய காலத்திற்கு சொல்லப்பட்ட விவகாரத்தை கட்டுப்படுத்தும் தாபனவிதிக் கோவை மற்றும் கிழக்கு மாகாண அரசசேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க நியமனம் செய்யலாம்.

## பகுதி IV

## நிதி

வீடமைப்பு அதிகாரசபை நிதியம்

11. (1) வீடமைப்பு அதிகாரசபை தனக்கென ஒரு நிதியத்தைக் கொண்டிருக்கும். (இதனகத்துப்பின்னர் அதிகாரசபை நிதியம் என குறிப்பிடப்படும்)

(2) வீடமைப்பு அதிகாரசபைக்கான கீழ்க்காட்டப்படும் பெறுவனவுகள் முதற்கட்டமாக மாகாணசபை நிதியத்துக்கு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அதனகத்துப்பின்னர் அதிகாரசபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(அ) கிழக்கு மாகாணசபையினால் காலத்துக்குக் காலம் வீடமைப்பு அதிகாரசபை சார்பாக வாக்குப்பணமாக வழங்கப்படுகின்ற அனைத்து பணத்தொகைகளும் ;

(ஆ) இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்திற்காக தனிப்பட்டவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற அனைத்து பணத்தொகைகளும் ;

(இ) வீடமைப்பு அதிகாரசபை அதன் நடவடிக்கைகள், செயற்பாடுகள், கடமைகள் மற்றும் அதிகாரங்களை செயற்படுத்தி பிரயோகிப்பதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற அத்தகைய அனைத்து பணத்தொகைகளும் ;

(ஈ) வீடமைப்பு அதிகாரசபைக்கு வரவு வைக்கப்படுகின்ற அனைத்து ஒன்று திரண்ட பணத் தொகைகளும்.

(3) வீடமைப்பு அதிகாரசபை இந்நியதிச்சட்ட நிபந்தனைகளுக்கமைவாக அதிகாரசபை நிதியத்தை பராமரித்து செயற்படுத்தும்

(4) வீடமைப்பு அதிகாரசபை அதன் நிதியை காலத்துக்குக் காலம் அதிகாரமளிக்கப்படுகின்ற அதன் முகாமைத்துவ விவகாரங்கள், செயற்பாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள், அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் செலவீனக் கொடுப்பனவுகள், இந்நியதிச்சட்டத்தின் பிரிவு 10 இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கான சம்பளக்கொடுப்பனவுகள், இந்நியதிச் சட்டத்தின் மற்றும் வேறு ஏதேனும் எழுத்துமூலமான சட்டங்களின் கீழ் வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிக்கின்றபோது மற்றும் அது போன்ற ஏனைய நோக்கங்களின்போது வீடமைப்பு அதிகாரசபைக்கு ஏற்படுத்தப்படுகின்ற அத்தகைய செலவீனங்களை கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தலாம்.

(5) கிழக்கு மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற அத்தகைய நிதி 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 19 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் நிதிக்குப் பொறுப்பான மாகாண அமைச்சர் ஆளுநருடன் கலந்தாலோசித்ததன் பேரிலும் மாகாண நிதியிலிருந்து அத்தகைய தவணை முறையில் கொடுப்பனவு செய்யப்படலாம் என்பதுடன் அத்தகைய தொகை உட்பிரிவு (1) இன் கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(6) அதிகாரசபை நிதிப் பராமரிப்பு மற்றும் செயற்படுத்துகை 1987 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பகுதி III இற்கு அமைவானதாகவிருத்தல் வேண்டும்.

12. வீடமைப்பு அதிகாரசபை இந்நியதிச்சட்டத்தின் கீழ் அதன் அதிகாரங்களைப் பிரயோகித்தல் செயற்பாடுகள் மற்றும் கடமைகளைப் புரிதல்களின்போது வீடமைப்பு அதிகாரசபைக்கு கடப்பாடாக்கப்படுகின்ற அத்தகைய தேவைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு அமைச்சரின் சம்மதத்தின் பேரில் அல்லது 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 21இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

*வீடமைப்பு அதிகாரசபைக்கு கடன் பெறும் அதிகாரம்.*

13. (1) வீடமைப்பு அதிகாரசபையின் நிதியாண்டானது ஒரு கலண்டர் வருடமாக அமைதல் வேண்டும்.

*வீடமைப்பு அதிகாரசபையின் நிதியாண்டு மற்றும் கணக் காய்வுகள்.*

(2) வீடமைப்பு அதிகாரசபையின் வரவு மற்றும் செலவீனங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக கணக்குப் புத்தககங்களில் வைக்க வீடமைப்பு அதிகாரசபை காரணமாக அமைதல் வேண்டும்.

(3) பொதுக் கூட்டுத்தாபனங்களை கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆவது சரத்தின் எற்பாடுகள், அரசாங்கம் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துடன் வீடமைப்பு அதிகாரசபை அத்தகைய கணக்காய்வுக் கடப்பாடுகளைப் பொறுப்பாக்குமுன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்மதத்துடன் கூடிய நிபந்தனைகளுக்கமைவாக வீடமைப்பு அதிகாரசபையின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் ஏற்புடைத்தாகும்.

## பகுதி V

## பொது

14. வீடமைப்பு அதிகாரசபை முடிவுற்ற கலண்டர் வருடத்திற்கான நிதி மற்றும் நிருவாக அறிக்கைகளை அடுத்து வருகின்ற வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்கு பிந்தாமல் கிழக்கு மாகாணசபைமுன் வைத்தல் வேண்டும்.

*வருடாந்த அறிக் கைகளை கிழக்கு மாகாண சபைமுன் வைத்தல்.*

15. (1) வீடமைப்பு அதிகாரசபை அதன் முகாமைத்துவ விவகாரங்கள் மற்றும் அனைத்து அல்லது ஏதேனும் விடயங்கள் தொடர்பில் இந்நியதிச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அதிகாரப்படுத்தப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கிக் கொள்ளலாம்.

*வீடமைப்பு அதி கார சபைக்கு விதிகளை ஆக்கு தல் அதிகாரம்.*

(2) வீடமைப்பு அதிகாரசபையால் இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கிக் கொள்ளப்படுகின்ற எந்த விதிகளும் அமைச்சரின் அங்கீகாரம், கிழக்கு மாகாண சபையின் உறுதிப்படுத்துகை மற்றும் அத்தகைய உறுதிப்படுத்துகை வர்த்தமானப் பத்திரிகையொன்றில் பகிரங்கப் படுத்துகை யுடன் அமுலுக்கிடப் படலானதாதலும் வேண்டும்.

16 (1) வீடமைப்பு அதிகாரசபையினால் ஏதேனும் அசையாச்சொத்து அதன் செயற்பாடுகள் தொடர்பில் தேவைப்படுத்தப் படுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய சுவீகரிப்பு மாகாண அமைச்சரினால் அங்கீகரிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் அது பொதுத்தேவைக்கு சுவீகரிக்கப்படுவதாக கருதப்படுதலும் வேண்டும். அத்துடன் அது காணி சுவீகரிப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சுவீகரிக்கப்பட்டு வீடமைப்பு அதிகாரசபைக்கு கையளிக்கப்படலாம். அத்தகைய சுவீகரிப்புத் தொடர்பிலான ஏதேனும் பணக்கொடுப்பனவு வீடமைப்பு அதிகாரசபை நிதியத்திலிருந்து செய்யப்படுதல் வேண்டும்.

*காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அசையாச் சொத் துக்களை பெற்றுக்கொள்ளல்.*

(2) வீடமைப்பு அதிகாரசபையின் செயற்பாட்டு நோக்கங்களுக்காக கிழக்கு மாகாண எல்லைப்பிரதேசத்திற்குள் ஏதேனும் அரசகாணி தேவைப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாகாண அமைச்சர் அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் இணைப்பு II விடயம் 1-1:2 இற்கமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு கிழக்கு மாகாணசபையின் ஊடாக வீடமைப்பு அதிகாரசபைக்கு அத்தகைய காணி கிடைக்கக்கூடியதாகவும் அதனை நிர்வகித்து கட்டுப்படுத்தி உபயோகப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்

ஏதேனும் காணி அல்லது இருப்பிடத்திற்குள் பிரவேசிப்பதற்கான அதிகாரம்

17 . வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் அல்லது அவரால் எழுத்துமூலம் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது அலுவலர்கள் வீடமைப்பு அதிகாரசபையின் ஏதேனும் வேலையை அல்லது செயலை நிறைவேற்றுவதற்கு நியாயமான அவசியம் எனக் கருதும் ஒரு காரியத்தை நிறைவேற்ற அல்லது ஏதேனும் விசாரணையை மேற்கொள்ள அல்லது பரிசீலனை செய்ய அல்லது வீடமைப்பு அதிகாரசபையின் ஏதேனும் செயற்பாடுகளை செயற்படுத்த ஏதேனும் காணி அல்லது குடியிருப்பின் சொந்தக்காரர் அல்லது உடமை கொண்டிருப்பவருக்கு ஆகக்குறைந்தது மூன்று நாள் அறிவித்தல் கொடுத்ததன்மேல் அத்தகைய காணி அல்லது குடியிருப்புக்குள் பிரவேசிப்பது சட்ட முறையானதாதல் வேண்டும்.

தவறுகையும், தண்டனையும்

18. இந்நியதிச்சட்டத்தின் அல்லது ஏதேனும் விதிகளின் கட்டளைகளின் பணிப்புக்களின் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட தேவைப்படுத்தல்களின் ஏற்பாடுகளை ஏற்று நடக்கத் தவறும் அல்லது முரண்படும் எவரேனும் நபர் இந்நியதிச்சட்டத்தின் அல்லது சுருக்கமுறை விசாரணையொன்றில் நீதவான் ஒருவரின் முன்னிலையில் குற்றங் காணப்படின் இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றமொன்றைப்புரிந்தவராகக் கருதப்பட்டு ஆயிரம் ரூபாவிற்கு விஞ்சாத தண்டப்பணமொன்றை அல்லது இரண்டு வருடங்களுக்கு விஞ்சாத சிறைத்தண்டனையை அல்லது தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாக்கப்படுவார்.

பொருள்கோடல்.

19. இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி:-

'அமைச்சர்கள் வாரியம்' என்பது அரசியல் யாப்புச் சட்டத்தின் சரத்து 154ஊ இன் ஏற்பாடுகளுக்கமைவாக தாபிக்கப்பட்ட அமைச்சர்கள் வாரியத்தைக் குறிக்கும்.

'அரச முகவர்' என்பது அரச திணைக்களம் அல்லது பொதுக்கூட்டுத்தாபனங்களை உள்ளடக்கும்.

'உள்ளூராட்சி நிறுவனங்கள்' என்பது மாநகரசபைகள் கட்டளைச்சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் ஏதேனும் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனங்கள் அல்லது அத்தகைய அல்லது அதற்கு சமாந்தரமான அதிகாரங்கள் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை பிரயோகப்படுத்தும் அத்தகைய நிறுவனங்கள் அல்லது சபைகள், 'செயலாளர்' என்பவர் வீடமைப்பு என்ற விடயம் கிழக்கு மாகாணத்தின் எவ்வமைச்சின் மேற்பார்வையின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோ அவ்வமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.'பிரதம செயலாளர்' என்பவர் 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 31இன் ஏற்பாடுகளுக்கமைவாக கிழக்கு மாகாணத்திற்கென நியமிக்கப்பட்ட பிரதம செயலாளரைக் குறிக்கும்.

"பொதுக்கூட்டுத்தாபனம்" என்பது, கம்பனி சட்டத்தின் கீழ் அன்றி ஏதேனும் எழுத்துமூல சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் அதன் நிதி அல்லது மூலதனம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அரசினால் நன்கொடையாகவோ கடனாகவோ அல்லது வேறுவகையாகவோ வழங்கப்பட்ட ஏதேனும் குழுமம் அல்லது வேறு நிறுவனம்.

"வீடமைப்பு அபிவிருத்தி" என்பது, புதிய வீடுகளை நிர்மானித்தல் அல்லது பராமரித்தல் அல்லது ஏலவே அமைக்கப்பட்டுள்ள வீடொன்றை உயர்நிலைப்படுத்தல்.

"வீடுகள் உயர்தரப்படுத்தல்" என்பது, ஒரு வீடு தொடர்பில் அவசியமெனக் கருதப்படும் சாதாரண திருத்தங்களுக்கப்பால் ஏலவே அமைக்கப்பட்டுள்ள வீடொன்றிற்கு அதனை முறையான நிலைப்படுத்த செய்யப்படும் பிரத்தியேகமான ஒரு வேலை அல்லது திருத்தம்

''வீடமைப்பு''என்பது, மனித குடியிருப்புப் பயன்பாட்டிற்காக அல்லது அதைத் தழுவியதாக நிர்மானிக்கப்படும் கட்டடம் அல்லது கட்டடங்கள் அல்லது அமைப்புக்கள்

ஒவ்வாமை ஏற்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி இருத்தல்

20. இந்நியதிச் சட்டத்தின் தமிழ்மொழி உரை மற்றும் சிங்களமொழி உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் மொழி உரையே மேலோங்கியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

3- 259